
மலர் - 9 ஜூலை - 1996 இதழ் - 7

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது | 1 |
| 2. | ஆவியின் ஒருமை | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | சபை கூடி வருதல் | 18 |
| 5. | இயேசுவை யோவான் அறிமுகப்படுத்துகிறார் | 24 |
| 6. | இரட்சிப்பு என்று ஒன்று உண்டா? | 29 |

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 JULY - 1996 ISSUE -7

## ஆசிரியவுரை

## "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது"

பிதாவாகிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகிய யூதர்கள், இயேசுவை வேதவசனங்களால் முன்னறிவிக்கப்பட்ட இராஜாவாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற பெருநோக்கோடு எழுதப்பட்ட நற்செய்தி நூலாகிய மத்தேயு பதினைந்தாம் அதிகாரம் இருபத்தெட்டாம் வசனத்தில் இவ்வார்த்தைகள் இடம் பெற்றுள்ளது.

நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை, எதிர்பார்க்கும் ராஜா இவர்தான் என்று பல கோணங்களில் எடுத்துக்காட்டியும் அவரை ஏற்றுக் கொள்ளாமல் யூதர்கள் ஒதுக்கினர். முதல் பத்து அதிகாரங்கள் வரை ஒருவாறு சமாளித்துத் தாக்குப்பிடித்த யூதர்கள் அதற்குமேல் இயேசுவைப் படிப்படியாக ஒதுக்கித் தள்ளினர். சமயம் சரியாகக் கிடைக்கும் போது, மோசேயின் பிரமாணத்தைக் கொண்டும், தங்கள் பாரம்பரியத்தைக் கொண்டும் எதிர்க்கவும் செய்தனர். நம்முடைய வசனப்பகுதி அமைந்துள்ள 15-ம் அதிகாரத்தில்கூட, பரிசேயர், வேதபாரகர் இவர்களுடைய "போலியான" பாரம்பரியத்தைக் கடுமையான வார்த்தைகளால் இயேசு சாடினார். ". . . குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்" (வ. 14) என்றார். அவர்களைப் பற்றிய கடுமையான வார்த்தைகளால், ஜனங்கள் மத்தியில் தங்கள் பக்தி சாயம் வெளுத்துப் போவதால் இடறலடைந்தார்கள் (வ. 12) தங்களுடைய கோபத்தால், தனக்கு அவர்கள் தீமை செய்யத் திட்டமிடுவர் என்று எண்ணிய இயேசு அருகிலுள்ள பெனிக்கே தேசத்தின் தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார் (15.21). இப்பட்டணங்கள் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தன.

இயேசுவானவர் இப்பகுதியில் கடந்து சென்றதற்கு வேறொரு முக்கியக் காரணமும் உண்டு. யோவான் ஸ்நானகனின் மரணத்திற்குப் பின், ஏரோது அந்திப்பாவின் கவனம் இவர்பக்கம் திரும்பியிருந்தது. ஆனால் அவருடைய "வேளையோ" இன்னும் வரவில்லை. ஆகவே தன்னுடைய வேளை வரும் வரை அவனுடைய கொலை முயற்சிக்கு விலகியிருக்க வேண்டியதாயிருந்தது. அதற்கு ஒரே வழி, ஏரோதுவின் ஆளுகையின் கீழ்வராத வேறே பகுதிக்குச் செல்வதாகும்.

அப்படி, அவர் அங்கு சென்றபோதுதான், ஓர் ஆச்சரியமான சந்திப்பும், ஜோரான உடையாடலும் நடைபெற்றது (வச. 21-28)

ஆம், அந்தத் திசைகளில் குடியிருக்கிற ஒரு கானானிய ஸ்திரீ அவரிடம் வந்து, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று பிசாசு பிடித்த தன்மகளுக்காக மன்றாடினாள். ஆனால் இளக்கமான இருதயத் திற்குச் சொந்தக்காரரான நமதாண்டவரோ, வழக்கத்திற்கு மாறாக மௌனம் சாதிக்கிறார், அவளுடைய தொந்திரவு தாங்காத இயேசுவின் சீடர்களோ இவளைக் கவனித்து அனுப்பும்படி அவரிடம் வேண்டினர். அங்கே சீஷர்களின் கோரிக்கைக்கு நேரிடையாக பதில் சொல்ல விரும்பாத இயேசு, சம்பாஷணையைக் கொஞ்சம் திசை திருப்புகிறார். தான் வந்த நோக்கம் வேறு என்று சொல்கிறார். "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே யன்றி, மற்றப்படியல்ல என்றார்" (வ. 24)

இதற்கு மேல் பேசமுடியாமல் சீடர்கள் ஒதுங்கிக் கொண்டனர். இவளோ மீண்டும் வந்து, அவரைப் பணிந்து கொண்டு, தன் கோரிக்கையை நிறைவேற்ற நின்றாள். அங்கே அவளுடைய விசுவா சத்தைப் புடமிட்டு அநேகருக்கு அவளுடைய விசுவாசத்தின் உறுதிப் பாட்டை வெளிப்படுத்த விரும்பிய இயேசு, தன்னிலையை இவ்விதமாக எடுத்துக் கூறினார். "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்குட்டிக ளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" (வ. 26)

அவளும் விடுவதாக இல்லை. அவருடைய வாயின் வார்த்தை களையே தான் விரும்பும் இரக்கத்திற்கு ஆயுதமாகப் பயன்படுத்து கிறாள். அவள் எவ்வளவு ஞானமுள்ள ஸ்திரீயாக இருந்துள்ளாள் என்பது வியப்பாக உள்ளது. "அதற்கு அவள் : மெய்தான் ஆண்ட வரே, ஆகிலும் நாய்க் குட்டிகள் தங்கள் எஜமானர்களின் மேஜை யிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" (வ. 27)

தன்னை அவள், இவ்வளவு தூரம் தாழ்த்தி, விசுவாசத்தின் உறுதியோடு பதில் சொன்னபோது தான், இயேசு, "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது" என்று மெச்சினார். அது மாத்திரமல்ல, அவள் விரும் பின நன்மையையும் கொடுத்தார். ஆம், கொடிய வேதனைப்

பட்டுக் கொண்டிருந்த அவள் மகள் அந்நேரமே சொஸ்தமானாள் (வ. 28)

விசுவாசத்தினாலே ஆசீர்வாதத்தைப் பெற்ற முதல் புறஜாதி இவள்தான். விசுவாசத்திற்காய் இயேசு கிறிஸ்துவால் பாராட்டப்பட்ட முதல் பெண்மணியும் இவள் தான். அப்படியானால் அவளுடைய விசுவாசம் எப்படிப்பட்ட விசுவாசமாயிருந்ததென்று நாம் பார்ப்போம்.

## I. அர்த்தமுள்ள விசுவாசம்

அந்நாட்களில் இயேசு யாருக்காக வந்தாரோ, எந்த வம்சத்தில் வந்தாரோ, எந்தக் கோத்திரத்தில் வந்தாரோ அவர்களெல்லாரும் இயேசுவின் மேசியாத்தன்மையையும், அவரின் வம்ச வரலாற்றையும் துளியும் ஏற்றுக் கொள்ளாமல் ஒட்டுமொத்தமாக ஓரம் கட்டினர். (யோவா 1 : 11) இவர்களின் இந்த அநியாயச் செயலில் எந்த அர்த்தமும் இருந்ததாகத் தெரியவில்லை. அறியாமையும், அகம்பாவமும் தான் அவர்களின் செயலுக்கு அஸ்திபாரமாக இருந்தது.

ஆனால், அண்டை நாட்டில் வசித்த இந்தக் கானானிய ஸ்திரீயோ, இயேசுவை, "தாவீதின் குமாரனே" என்று கூப்பிட்டாள். தங்கள் முன்னோர்களைப் பற்றி வீண் பெருமை பேசி, தங்கள் பாரம்பரியத்தைக் குறித்துப் பீற்றிக் கொண்ட யூதர்கள், இயேசுவின் வம்ச வரலாற்றை அங்கீகரிக்க பிடிவாதமாக மறுத்தனர். ஆனால், சற்றும் சம்பந்த இல்லாத இந்தக் கானானிய ஸ்திரீயோ, இயேசுவை தாவீதின் குமாரனென்று மிகுந்த அர்த்தத்தோடு அழைத்தாள். அர்த்தத்தோடு தான் அழைத்தாள் என்பதை ஆண்டவரோடு இவள் நடத்தின உரையாடலிலிருந்து நாம் அறியலாம்.

இயேசுக் கிறிஸ்து நாசரேத்தில் வளர்ந்தபடியால், அந்நாட்களில் அவர்,"நசரேயனாகிய இயேசு" என்று தான் மிகப் பெரும்பாலோருக்கு அறிமுகமாயிருந்தார். மேலும், பழைய பிரமாணத்தில் பரிச்சயம் பெற்ற பரிசேயர் வேதபாரகர் போன்றோர், தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மேசியா இவர்தான் என்றும், தாவீதின் சிம்மாசனத்திற்குச் சொந்தமாக வருவார் என்று சொல்லப்பட்டவர் இவர்தான் என்றும் அறியாதிருக்கும்பொழுது, பழைய பிரமாணத்தை எவ்விதத்திலும் அறிந்திருக்க நியாயமில்லாத இந்தக் கானானிய ஸ்திரீ, இயேசுவைக் "தாவீதின் குமாரனென்று" வெளிப்படுத்தினாள்.

யூதர்களால் அற்பமாக எண்ணப்பட்ட புறஜாதியாளாகிய இந்த கானானிய ஸ்திரீ, இயேசுவை எப்படி இவ்வளவு துல்லியமாக அறிந்து கொண்டாளென்பதற்கு வேதத்தில் நமக்கு ஆதாரமில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். அந்நாட்களில் அவருடைய அற்புதங்களையும் இன்னும் அவருடைய மேன்மையையும் கேள்விப்பட்டு எப்படியாவது

அவரைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள விரும்பி, முயற்சித்து தெரிந்து கொண்டிருந்திருப்பாள்.

சரி, இன்று நம்முடைய நிலை என்ன? இயேசுவைக் கர்த்தர் என்றும் கிறிஸ்து என்றும் அநேகர் சொல்லிக் கொள்கிறோம். அதில் தவறில்லை. ஆனால் அவ்வார்த்தைகளுக்கான பொருள் உணர்ந்து சொல்கிறோமா? அல்லது யாரோ சொல்லிக் கொடுத்ததை வைத்துச் சொல்கிறோமா? அல்லது எதுவுமே தெரியாமல் குருட்டுத்தனமாகச் சொல்லித் திரிகிறோமா? பெரும்பாலானவர்களின் நிலை பரிதாப மாகவே உள்ளது. இயேசு எப்படி இப்பூமிக்கு வந்தாரென்று தெரியாது, என்ன நோக்கத்திற்காக வந்தாரென்று தெரியாது. இந்தப் பூமியில் என்ன செய்தாரென்றும் எதை நிறைவேற்றினாரென்றும் தெரியாது, எப்படி மரித்தாரென்றும், அவர் மரணத்தின் மூலம் மனுக்குலம் பெற்றுக்கொண்ட நன்மை என்ன என்றும் தெரியாது, அவர் தன்னுடைய இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையைப் பற்றியும், அந்த ஒரு சபையில் அங்கமாக இருக்க வேண்டியதின் அவசியம் பற்றியும் தெரியாது. இன்னும் அவர் எப்படி வருவாரென்றும் எப்பொழுது வருவாரென்றும் வருகையில் என்ன நடக்குமென்றும், எதை அடிப்படையாக வைத்து நியாயந்தீர்ப்பாரென்றும், யாரைப் பார்த்து அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டகன்று போங்க ளென்று சொல்வாரென்றும் தெரியாது. இவைகள் எதுவுமே தெரியாமல் அநேகர் இயேசுவே கர்த்தாவே என்று சத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் நம்மில் யாராவது இருப்போமானால் உடனடியாக நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். கானானிய ஸ்திரீ யைப்போல் நாம் அவர் மீது வைத்திருக்கும் விசுவாசம் அர்த்தமுள்ள விசுவாசமாக இருக்க வேண்டும். இல்லையேல் பயனில்லை.

## II உறுதியுள்ள விசுவாசம் :

இயேசுவை தாவீதின் குமாரரெனன்று அறிந்து அவர் மீது, அவள் விசுவாசம் வைத்தாலும், அவளுடைய விசுவாசத்திற்கு வந்த தடைகள் அதிகம். முதல் தடை புறஜாதி என்பது. அந்நாட்களில், யூதர்கள் புறஜா திகளை நாய்களைப் போல எண்ணினர், நடத்தினர். எந்தப் புறஜாதி யானும், மார்க்க ரீதியாக தயுவை நாடி ஒரு யூதனிடம் செல்லத் துணியமாட்டான். அப்படி வந்தாலும் யூதர்கள் ஏற்றுக் கொள்ளார்கள். ஆனால், இவளோ, தனது விசுவாச உறுதியால் தனது முதல் தடையைக் கம்பீரமாகத் தாண்டினாள். இயேசுவிடம் வந்தாள்.

தனது முதல் தடையை வெற்றிகரமாகத் தாண்டியாயிற்று, என இவள் சந்தோஷப்பட்டு இயேசுவிடம் தன் பிரச்னையைச்

சொல்கிறாள். அங்கே, இயேசு உடனடியாக பதில் சொல்லாத போது, சீஷர்கள் இவளுக்குத் தடையாக மாறினர். ஆம், இயேசுவுக்குப் பின் வருகிற பெருங்கூட்டத்தில் ஒரு புறஜாதிப் பெண் இருப்பது பிடிக்காமல் இவளை சீக்கிரம் அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். (விச. 23) ஆனால் அந்தத் தடையையும் அவள் சமாளித்துக் கடந்தாள்.

முதலில் எனக்கு இரங்கும் என கூப்பிட்டவள், (வ. 22) பிறகு பின் தொடர்ந்தவள் (வ. 23) இப்பொழுது கிட்டே வந்து, "ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண் டாள்". சீஷர்களால் பட்டுப் போன அவளுடைய நம்பிக்கை, இப்பொழுது துளிர்த்திருக்கும் என்று தான் நாம் எண்ணுவோம். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? யாரை நம்பி வந்தாளோ, அந்த இயேசுவே இவளுக்கு ஒரு தடையாக மாறினார். ஆம், வசனம் 26-ஐப் பார்த்தால் அவள் அப்படி எண்ணியிருக்க வாய்ப்புண்டு. "பிள்ளை களின் அப்பத்தை எடுத்து நாய் குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" (15.26) இவளுடைய இருதயம் எப்படிப்பட்டது என்று இயேசு அறிந்திருந்தார். ஆனால், இவர் என்ன செய்வார் என்பதை, அவர் வாயின் வார்த்தைகளை வைத்துத்தானே அவள் எடைபோட்டி ருக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? இவன் ஒரு ஆள் என்று இவனை நம்பி நாம் வந்தோம் பார் என்று சளித்து, நம்முடைய தகுதிக்கும், திறமைக்கும் ஏற்றாற்போல் அவன், இவன் என்று ஏகவசனத்தில் ஏசிவிட்டு வேகமாக திரும்பிச் சென்றி ருப்போம்.

ஆனால், நம்பிக்கையற்றுப்போன நிலையிலும் அவள் நம்பினாள். ஆம், நம்பி வந்தவர் சரியானவர். என்ன ஆனாலும் பரவாயில்லை, இறுதி வரை பார்ப்போம் என எண்ணினாள். இவளின் விசுவாச உறுதியை இயேசு அறிந்திருந்தார். ஆனால், ஒரு நோக்கத்திற்காகத் தான் தன்னைச் சோதிக்கிறார் என்பது இவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகிலும் அவள் சோர்ந்து போகவில்லை.

சகோதரனே! அன்பரே! நண்பரே! நம்முடைய விசுவாசத்தின் உறுதிப்பாடு எப்படியுள்ளது? நம்பிக்கைக்கேற்ற பலன் கிட்டாத போது தேவன் இல்லையென்று சொல்கிறோமா? தேவன் நமக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத் தாமதிக்கும் போது அவரை தூஷிக் கிறோமா? நம்முடைய ஆசீர்வாதம் மற்றவர்களை விடக் குறைவாக இருக்கும் போது தேவன் பட்சபாதமுள்ளவர் என்று சளித்துக் கொள்கிறோமா? இழப்புகளும், வியாதிகளும், தோல்விகளும் நேரும் போது, விசுவாசவேகம் குறைந்து போகிறதா?

வேண்டாம். இந்தக் கானானிய ஸ்திரீ எப்படி தன் விசுவாச உறுதியைக் காட்டினாளோ அதைப் போல, எந்நிலையிலும் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் உறுதி காட்டுவோம்.

## III தன்னலமற்ற விசுவாசம்

எப்படிப்பட்ட தடைகளைத் தாண்டி இவள் தன் விசுவாச உறுதியைக் காட்டினாள் என்று பார்த்தோம். அவள் இவ்வளவு பாடுபட்டது யாருக்காகத் தெரியுமா? வியாதியாய் இருந்த தன் மகளுக்காக. ஆனால் இவள் இயேசுவிடம் என்ன வேண்டிக் கொண்டாள் தெரியுமா? தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று (வச. 22) தன்னுடைய மகளின் பிரச்னையைத் தன்னுடைய பிரச்னையாக, தன் மகளின் பாடுகளைத் தன்னுடைய பாடுகளாக எண்ணினாள். சரீரப் பிரகாரமான தன் மகள் சரீரப் பிரகாரமான தன் சந்ததி வேதனைப்படுகிறதே எனக் கலங்கினாள்.

இங்கே நம்மில் அநேகர் கூட தன் குடும்பத்திலுள்ளவர்கள் வேதனையில் துடிக்கும் பொழுது, கலங்கிப்போகிறோம். அந்த வேதனையை நம்முடைய வேதனையாகவே கருதுகிறோம். குறைவாகச் சொல்லவில்லை ஆனால், இதையே கொஞ்சம் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்ப்போம்.

நம்முடைய குடும்பத்தில், ஆவிக்குரிய ரீதியில் நம்முடைய பிள்ளைகள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது எத்தனைபேர் கலங்குகிறோம்? எத்தனைபேர் நம்முடைய பிள்ளைகளுக்கு ஆத்தும விடுதலை பெற்றுத்தர முயற்சிக்கிறோம்? தன் மகளின் சரீரப் பாடுகளுக்கு விடுதலை கொடுக்க யாரால் முடியும் என்று கண்டு பிடித்து, இயேசுவால் தான் முடியும் என அவரண்டை ஓடிவந்ததைப் போல், நம் பிள்ளைகளின் ஆத்தும இரட்சிப்புக்கு ஓடி வருகிறோமா?

இங்கே ஒன்றைக் கவனிப்பது அவசியம். அந்த கானானிய ஸ்திரீ, தன் பிள்ளைக்குத் தேவையான சரீர சுகத்தைத் தான் கேட்டுப் பெற்றுக் கொண்டது போல, நமது சந்ததிகளின் ஆத்தும சுகத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது இவ்விஷயத்தில் தேவனுடைய வார்த்தை தெளிவாக உள்ளது. "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன் மேல் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல் தான் இருக்கும்" (எசே. 18:20)

இங்கே இந்தக் கானானிய ஸ்திரீ நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடம், மற்றவர்களின் விடுதலைக்காக நாம் பிரயாசை எடுக்க வேண்டு

மென்பதே. அதுவும் நமது பிரச்னைகளுக்காக நமது தேவைக ளுக்காக நாம் தேவனிடம் மன்றாடுவதைப் போலவே மற்றவர் களுக்காகவும் மன்றாடவேண்டும். ஜெபம் என்பது மானிடத்திற்குக் கிடைத்த மாபெரும் ஆசீர்வாதம். அதை நாம் நமது தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தக் கூடாது.

## IV. கிரியையுள்ள விசுவாசம்

இறுதியாக, அந்தக் கானானிய ஸ்திரீயிடம் காணப்பட்ட விசுவாசம் கிரியையுள்ள விசுவாசமாக இருந்தது. இயேசுக் கிறிஸ்து அவளுடைய கோரிக்கையை கொஞ்சம் இழுத்தபோது அவள் சோர்ந்து போகவில்லை. இயேசுவின் முகத்திலே அவள் கண்ட இரக்கத் திற்கும், அவருடைய வாயில் பிறந்த வார்த்தைகளுக்கும் இடையே பெரும் வேறுபாடு இருப்பதைக் கண்டாள். அவர்மீது தான் கொண்ட விசுவாசம் மிகப் பெரிது என்பதை, அவரைச் சுற்றி நெருங்கி வந்ததன் மூலம் நிரூபித்துக் காட்டினாள்.

செயல்படும் விசுவாசத்தை தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார், இப்படிப்பட்ட விசுவாசம் கொண்ட தேவதாசர்கள் தான், வேத எழுத் துக்களால் பாராட்டப்பட்டுள்ளனர். எபிரேயர் பதினோராம் அதிகா ரத்தை ஆக்கிரமித்துள்ள விசுவாச வீரர்களெல்லாம் செயல்படும் விசுவாசத்தை வெளிக்காட்டியவர்களே. யாக்கோபு ஆசிரியர் இதைப் பற்றி என்ன சொல்கிறாரென்று கவனியுங்கள். "வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ"? (யாக். ௨ : ௨0) அதாவது, செயல்படாத விசுவாசம் செத்ததென்று கூறுகிறார்.

ஆனால், இந்தக் கானானிய ஸ்திரீயின் விசுவாசம் செத்தாயிருக்க வில்லை. நிறைந்த விசுவாசத்தோடு நெருங்கி வந்தாள். கிரியைகளோடு கூடிய விசுவாசத்தால் ஆசீர்வாதத்தோடு திரும்பிச் சென்றாள். ஆம், கிரியைகளோடு கூடிய விசுவாசமுள்ளவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருப்போம். கானானிய ஸ்திரீ வழியில் நடப்போம்.

கர்த்தருக்குள் அருமையானவர்களே! இயேசுக் கிறிஸ்துவால் பாராட் டப்பட்ட விசுவாசமுடையவளாய் இந்தக் கானானிய ஸ்திரீ இருந்தாள் என்பதைப் பார்த்தோம். அப்படிப் பாராட்டப்படுவதற்கு, அவளுக் குள்ளாக இருந்த விசுவாசம் எப்படிப்பட்டதாயிருந்தது என்றும் பார்த்தோம்.

சரி, நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? நம்முடைய விசுவாசத்தின் செயல்பாடுகளைக் கண்டு, மகனே, உன் விசுவாசம் பெரிது என்றும், மகளே, உன் விசுவாசம் பெரிது என்றும் பாராட்

டப்படும் அளவுக்கு இருக்கிறதா? ஒருவேளை, யதார்த்த நிலை வேறு விதமாக இருந்தால் அவரால் பாராட்டப்படும் விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்வது அவசியம். அப்படியானால் அந்த விசுவாசத்தை எப்படிப் பெற்றுக்கொள்வது என்ற நியாயமான கேள்வி எழுகிறது. அநேகர், விசுவாசத்தை பல வகையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறினாலும், வேதம் என்ன சொல்கிறதென்று பாருங்கள். அப்போஸ்தலன் பவுல் உரோமையருக்கு எழுதும்போது இப்படிக் கூறுகிறார். "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோம. 10:17)

ஆக, நம்முடைய விசுவாசம், தேவனால் பாராட்டப்பட வேண்டுமானால், அது தேவனுடைய வசனங்களை ஆதாரமாகக் கொண்டு கட்டப்பட்டிருக்க வேண்டும். கட்டுக்கதைகளை நம்பி இருக்கக்கூடாது. ஆம், நம்முடைய இரட்சிப்பு உணர்வுகளின் அடிப்படையில் அல்ல வேத வசனங்களைக் கொண்டு உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கிறிஸ்தவ மத உலகில் தங்களை இரட்சிக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொள்ளும் அநேகரின் இரட்சிப்பு வேதவசனங்களை ஆதாரமாகக் கொண்டவை அல்ல. மனிதனுடைய போதனைகளை அடிப்படையாகக் கொண்டவை. கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. கள்ள உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டவை, பிசாசின் தந்திரத்தால் வந்த வஞ்சகங்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஆனால், எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? என்னுடைய விசுவாசம் தேவனுக்கு ஏற்றது என்றும், என்னுடைய இரட்சிப்பை தேவன் பாராட்டுகிறார் என்றும் எண்ணுகின்றனர். இல்லை இல்லவே இல்லை.

நம்முடைய விசுவாசம் பெரிது என்றும், நம்முடைய இரட்சிப்பு சரியானது என்றும் நம்முடைய தேவனால் நாம் பாராட்டப்பட வேண்டுமானால் நம்முடைய இரட்சிப்பு கீழ்க்கண்ட வசனங்களின்படியானதாய் இருக்க வேண்டும்.

1. விசுவாசிக்க வேண்டும் - எபி. 11:6, மாற்கு. 16:15, 16
2. மனந்திரும்ப வேண்டும் - அப். 2:38, அப். 17:30
3. அறிக்கையிட வேண்டும் - ரோம. 10:9, 10, மத். 10:32
4. ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்-அப். 2:38, 22:16

இந்த வசன ஆதாரங்களின்படி நாம் கீழ்ப்படிவோமானால் கர்த்தர் அவருடைய சபையில் நம்மை சேர்த்துக் கொள்ளுவார் (அப். 2 : 47) அதன் மூலம் அவராலே நாம் மெச்சப்படுவதோடல்லாமல் வாடாத ஜீவகிரீடத்திற்கும் சொந்தக்காரர்களாக மாறுவோம்.

E.Z.S. ராஜநாயகம்

# ஆவியின் ஒருமை

எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் இவ்வாறு எழுதுகிறார்: "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக் கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ் மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப் பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்." - எபேசியர் 4 :1-6.

ஆவியின் ஒருமை பற்றி பவுல் இங்கு பேசுகிறார். ஒரே ஆவி உண்டு, அவர் தேவத்துவத்தில் ஒரு நபராக, (ரோமர் 1:20) பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய தேவனோடும் இணைந்திருக்கிறார்.

தேவத்துவத்தின் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு, ஒரு குறிப்பிட்ட பணி இருந்தது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய சுவிசேஷத்தை எழுத பலரை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தி உதவியிருக்கிறார். எனவே, சுவிசேஷத்தில் வாயினால் ஏவப் பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்கள் இருக்கின்றன. (2 பேதுரு 1 : 20 ; 21; 2 தீமோ. 3 : 16, 17).

சுவிசேஷம் ஆவியின் வார்த்தை என்றும், அல்லது சத்தியத்தின் ஆவி என்றும் மீண்டும் மீண்டுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (யோவான் 14 : 17; 15 : 26; 16 : 13). தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் என பவுல் அதைக் குறிப்பிட்டார். (எபே. 6 ; 17). எபிரேய எழுத்தர் சொன்னார் : "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவ னாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கான தாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுக ளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது". (எபி. 4 : 11, 12).

தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் வார்த்தையானது முற்றிலும் சீராக இருக்கிறது. அது பூரணமாகவும் இறுதியானதாகவும் இருக்கிறது. அதன் மூலமாக, தேவன் சொல்ல விரும்பியதைச் சொல்லியிருக்கிறார்; தாம் சொல்ல விரும்பிய சகலவற்றையும் சொல்லியிருக்கிறார். முரண்பாடுகள் எதுவும் அதில் இல்லை. வசனமானது ஒருவனை ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனை வேறொன்றைச் செய்யச் சொல்லுவதும் கிடையாது. அதனோடு எதையும் சேர்க்கவோ, அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ அல்லது எவ்வழியிலும் மாற்றவோ கூடாது. (வெளி. 22 : 18, 19; 2 யோவான் 9 - 11). சந்தேகமின்றி, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலினால், ஒரே பரிசுத்த நற்செய்தியைத் தான் போதித்து வருவதாகவும், யாராவது வேறொரு நற்செய்தியைப் போதிக்க வந்தால், அவன் கர்த்தருடைய தூதனாகவே கூட இருந்த போதிலும், தேவனுடைய சாபம் அவன் மேல் இருக்கும் என பவுல் கூறினார். (கலா. 1:6-9).

எனவே, ஆவியானவர் வார்த்தையில் ஜீவனை ஊதினார். எனவே ஒருவன் அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தனது வாழ்விலும் இதயத்திலும் அதை ஏற்றுக் கொண்டால் அதுவே அவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவாகும். பேதுரு அறிவித்தார் : "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கி கொண்டவர்களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே". (1 பேதுரு 1 : 22, 23). விதைக்கிறவனுடைய உவமையை இயேசு கூறினார் : அதிலே, தேவனுடைய வார்த்தையாகிய விதையானது வித்தியாசமான பலதரப்பட்ட மண்ணில் விழுந்தது பற்றிக் கூறுகிறார். சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்து, நல்ல இருதயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதின் விளைவாக நல்ல விளைச்சலும், நல்ல பலனும் கிடைத்தது. (மத். 13). விதையில் ஜீவனிருந்தது. அந்த ஜீவனை ஆவியானவர் தேவனுடைய வசனமாகிய விதைக்குள் வைத்தார்.

அப்போஸ்தலர் பவுல் சொன்னார்: "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு,

எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந் தீர்க்கப்பட்டோம்'' (1கொரி. 12 : 13). பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பற்றி பவுல் இங்கு பேசவில்லை. ஆனால், மாறாக தமது உபதேசத்தின் மூலமாக, அல்லது தேவனுடைய வசனத்தின் மூலமாக கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஒருவனை ஆவியானவர் வழி நடத்தும் உண்மையைக் குறிப்பிடுகிறார். அதின் ஒரு பகுதி, ஒரே சரீரத்திற்குள் அல்லது கர்த்தரின் ஒரே சபைக்குள் திரு முழுக்குப் பெறுவது. இப்போது, தமது வார்த்தையை உபதேசிப்பதின் மூலம் ஒருவனை சபையில் சேர்க்க, தண்ணீரில் முழுக்கி, திருமுழுக்குப் பெறவும், மற்றொருவனை தெளித்து திருமு ழுக்குப் பெறவும் ஆவியானவர் வழிநடத்தமாட்டார். ஆவியானவர், அதாவது ஆவியின் வார்த்தை, அனுமதிக்காத பல காரியங்கள் ஆவியா னவர் மேல் சுமத்தப்படுகின்றன.

ஆனால் கர்த்தரின் சபையாகிய ஒரே சரீரத்திற்குள் நாம் ஒரு தடவை வந்து விட்டால், பின்னர் ''ஒரே ஆவிக்குள்ளாக தாகந் தீர்க்கப் பட்டோம்'' என அவர் சொல்லுகிறார்.அதாவது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த பின்னர் தொடர்ந்து ஆவியால் தாகந் தீர்க்கப்படுகிறோம், அல்லது தேவனுடைய வசனமாகிய ஆவியின் வசனத்தைப் பின்பற்று கிறோம். நாம் இனி ஒரு போதும் தாகமாக இராதபடியும், பசியாக இராதபடியும், ஜீவத் தண்ணீரிலும் ஜீவ அப்பத்திலும் நாம் பங்கு பெற வேண்டுமென கிறிஸ்து கூறினார்.

இப்போது, ஆவியானவர் தமது வார்த்தையை மனிதனுக்குக் கொடுக்கும் பணியை பூரணமாக முடிக்கும் வரையிலும், அப்போஸ்த லர்களும், அவர்கள் கைகளை வைத்து தேர்ந்தெடுத்த சீடர்களும் தேவனிடமிருந்து வந்தவர்கள் என்றும் தேவனுடைய செய்தியை அளிக்க அவரால் அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளும்படியாக, அற்புதங்களைச் செய்ய அனுமதித்தார். ஆனால் ஒரு முறை தேவனுடைய விருப்பத்தை எழுத்து வடிவில் கொண்டுவர ஆவியானவர் பலரை ஏவி, புதிய ஏற்பாடு பூரணமாக்கப் பட்ட நிலையில் மனிதனுக்கு அளிக்கப்பட்ட பின்னர், அற்புத அடையாளங்கள் இனி தேவையில்லை என்ற காரணத்தால் அவை ஓய்ந்து போயின. பவுல் 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் இதை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

ஆவியின் ஒருமையையும், ஆவியானவர் வெளிப்படுத்தின சத்தி யங்கள் எப்படி ஒருமையை உண்டாக்கின என்பதையும் கவனமாகப் பாருங்கள். தேவன் பிரிந்திருக்கவில்லை; கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை,

ஆவியானவரும் பிரிந்திருக்கவில்லை. தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் பிரிந்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள், அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். சேர்ந்து செயல்படுகின்றனர். அது போலவே அவர்கள் பேசிய வசனங்கள் நம்மை ஒற்றுமைப்படுத்தவும் ஒன்றாக்கவும் செய்யும்.

ஒரே ஒரு நற்செய்தியும், இரட்சிக்கப்பட ஒரே வழியும் மட்டுமே இருப்பதாக வார்த்தையில் ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து கூறியிருக்கிறார்; ". . . .நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." (மாற்கு 16 : 15, 16). சகலரும் அந்த நற்செய்தியைக் கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிந்தால் எல்லாருமே ஒரே வழியில் இரட்சிக்கப்படுவர். வீழ்ந்து போனவர்களை இரட்சிக்கும் கர்த்தரின் ஒரே வழி இதுவே. வேறு எந்த வழியிலாகிலும் ஒருவன் இரட்சிப்பு அடைய முடியாது.

ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என வார்த்தையில் ஆவியானவர் நமக்குச் சொல்லுகிறார். (எபே. 4 : 5). உலகமோ பல திருமுழுக்குகள் இருப்பதாகச் சொல்லுகிறது. ஆனால், பாவங்களின் மன்னிப்புக்கென்று (அப். 2 : 38) அடக்கம் எனப்படும் ஒரே ஒரு திருமுழுக்கைப் பற்றி மட்டுமே ஆவியானவர் கூறுகிறார். (ரோமர் 6 : 3, 4; கொலோ. 2:12). என் நண்பர்களே! மனிதன் கூறுவது எதுவாக இருப்பினும், ஆவியானவர் ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என கூறுகிறார்.

ஒரே ஒரு சரீரம் அல்லது சபை மட்டுமே இருப்பதாக ஆவியானவர் வார்த்தையில் நமக்குச் சொல்லுகிறார். (எபே. 4 : 4). மீண்டும், பல சபைகள் இருப்பதாக தொடர்ந்து நாம் மனிதனிடமிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலில் இருப்பதாக உரிமை கொண்டாடுபவர்கள் கூட, தேவனுடைய வசனத்தில் குறிப்பிடப்படாத சபைகளில் காணப்படுகின்றனர். ஒரே ஒரு சபை மட்டுமே இருப்பதாக தமது வசனத்தில் வெளிப்படுத்தின ஆவியானவர் - சந்தேகமின்றி, அது கிறிஸ்துவின் சபை (மத்தேயு 16 : 18) அவருடைய வசனத்தில் காணப்படாத சபைகளில் பலரையும் அங்கத்தினராக இருக்க வழி நடத்துவாரா? நிச்சயமாக, மாட்டார். ஆவியானவர் பிரிந்திருக்கவில்லை. அவருடைய வசனத்தில் கூறியிருப்பதற்கு முரணான காரியத்திற்குள் ஒருவனை வழி நடத்தமாட்டார். அப்படியானால் மனிதர்களுடைய சபைகளில் இருப்பவர்கள் ஆவியானவரால் அந்த சபைகளுக்குள் வழி நடத்தப்படவில்லை என்று

பொருள். அப்படிப்பட்ட மனித சபைகளில் அங்கம் வகிக்க தமது வசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தவில்லை. எனது நண்பர்களே! இந்தக் காரியங்களைப் பற்றி நாம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் மேலுமாக, வசனத்தின் வழியாக ஆவியானவர் எப்படிப் பேசுகிறார் என்றும், பணியாற்றுகிறார் என்றும், ஆவியினுடைய ஒருமையைப் பற்றியும் நாம் சொல்லிக் கொண்டே போகலாம். இந்த வசனங்களை நாம் பின்பற்றும்போதும், அவைகளை விசுவாசித்து அவற்றிற்குக் கீழ்ப்படியும் போதும் மட்டுமே ஆவியானவர் நம்மில் வாழமுடியும். அற்புதத்தினால் அல்ல, ஆவியானவருடைய வசனத்திற்கு முரண்பாடாக அல்ல, ஆனால் தேவனுடைய வசனமாகிய ஆவியின் உபதேசத்திற்கு ஏற்றபடி நடந்தால் மட்டுமே ஆவியானவர் நம்மில் வாழ முடியும். மேலுமாக, அவ்வாறு செய்தால் மட்டுமே கிறிஸ்துவோடு நாம் ஒன்றித்திருக்க முடியும். இந்த வாழ்வின் முற்றிலுமாக அவருக்கு விசுவாசமாக நடக்கும் போது, கர்த்தரோடு சதா காலமும் இருக்கத்தக்கதாக நாம் இறுதியில் பரலோக ராஜ்யத்திற்குச் செல்ல முடியும். பவுல் எழுதிய படி, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார்; மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்". (கலா. 6 : 7, 8).

என் நண்பரே! நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? சபையின் அங்கத்தினரா? இல்லையென்றால், கர்த்தரின் வசனத்தை நீங்கள் கேட்டு, கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட நாங்கள் ஜெபிக்கிறோம்.

J.C. சோட்

அநேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்.

II கொரி 2 : 17

## பெண்கள் பகுதி

# "பெண்"

தேவன் தாம் படைத்த யாவற்றையும் நல்லதென்று கண்டார். பூமி, ஆகாயம், சந்திரன், சூரியன், இவைகளை படைத்தார். மரங்களும், செடிகளும் உண்டாகக்கடவது என்றார். அவைகள் உண்டாயிற்று. எல்லாம் பூரணமாக இருக்க கண்டார். பின்பு பிதாவாகிய தேவன் தன் குமாரனிடம் "நம்முடைய சாயலில் மனிதனை படைக்கலாம்" என்று சொல்லி மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினார்கள்.

ஆறுநாட்களும் சிருஷ்டிப்பை முடித்துவிட்டு, ஆதாமை அந்த அழகான ஏதேன் தோட்டத்தில் வைத்து அதை பராமரிக்கும்படி செய்தார். பின்பு தேவன் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன்" (ஆத 2 : 18) என்றார். இவ்வாறாக "பெண்" என்பவள் பூமியில் சிருஷ்டிக்கப்பட்டாள்.

சகலத்தையும் நல்லதென்று தன் வாயாலேயே சொன்ன தேவன் ஒரே ஒரு சிருஷ்டிப்பு மட்டும் பூர்த்தியாகாமல் ஏதோ ஒரு தேவையில் இருப்பதாக உணர்ந்தார். அந்த தேவைய்யைப் பூர்த்தி செய்யும் ஆசீர்வாதத்தை அவர் பெண் ணிடம் கொடுத்து விட்டார். தேவ னின் சிருஷ்டிப்பின் மகுடமே பெண்தான் என்று கூட கூறலாம். சிருஷ்டிப்புகளிலேயே தலையானது ஆண் என்றால், அத்தலைக்கு கிரீடம் போன்றது பெண் தான் என்றால் மிகையா காது. ஆதாம் பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டான். ஸ்திரியோ உயிருள்ள ஒன்றிலிருந்து உண்டாக்கப்பட்டாள். ஆதாமின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கப்பட்டாள். அவன் தலையிலிருந்து உண்டாக்கப்பட்டு அவனை ஆட்சி செய்யாமலும், அவன் கால்களின் எலும்புகளிலிருந்து உண்டாக்கப்பட்டு அவனால் மிதிபடாமலும், அவனுடைய பக்கவாட்டில் உள்ள விலாவிலிருந்து உருவானதினாலே அவனுக்குச் சமமாக கருதப்படுகிறாள். இப்படியாக அவன் கரத்திற்கு கீழே பாதுகாப்பாகவும், இதயத்திற்கு அருகே அன்பைப் பெறவும் இப்படியாக அவள் சிருஷ்டிக்கப்பட்டாள். பெண் ணின் சிருஷ்டிப் பின் கட்டத்தை விவரிக்க இதைவிட சிறப்பான வார்த்தைகள் வேறொன்றும் இராது என கருதுகிறேன்.

தேவன் ஆண், பெண் இருவருக்கும் சிந்திக்கும் திறனையும், தங்கள் வாழ்க்கையை தாங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளும்

உரிமையையும் கொடுத்துவிட்டு ஒரே ஒரு எளிய கட்டளையை மாத்திரம் அளித்தார் "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்றார். மனுக்குலத்திற்கு "சோதனை" என்பதே பெண்ணின் வழியாகத் தான் எட்டிப் பார்த்தது. சர்ப்பத்தின் மூலம் பெண் வஞ்சிக்கப்பட்டாள். கீழ்ப்படியாமையின் மூலம் பாவம் உலகத்திற்கு வந்துவிட்டது. தன் கணவனுக்கும் கனியைக் கொடுத்தாள். பெண்களாகிய நாம் குற்றத்தை கணவன் மீது திணிக்கக் கூடாது. பாவம் என்ற பயங்கரத்தைக் கொண்டு வந்தவள் பெண்தான் என்ற கசப்பான அருவருப்பான உண்மையை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எவ்வளவு பரிதாபமான நிலை இப்போது பெண்ணிற்கு உண்டாகிவிட்டது. பரிபூரண நிலையில் இருந்த அவள் தன் புத்தியின்மையினால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டாள். கட்டளையை மீறியதால் அதற்குண்டான தண்டனையையும் பெற்றுவிட்டாள். "அவர் ஸ்திரீயை நோக்கி, நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன் வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் எந்றார். (ஆதி 3 : 16) மரணம் இந்த விதமாக உலகிற்குள் நுழைந்தது. சாபத்தைப் பெற்று துக்கத்தோடு இருந்த அவளிடம் அவள் பாரத்தை சற்று லகுவாக்கும் வண்ணம் இப்படிக் கூறுகிறார். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் (ஆதி 3:15) அதாவது, வருங்காலத்தில் ஏவாளின் சந்ததியாகிய பெண் இனத்தில் ஒரு ஸ்திரியின் மூலமாக உலக ரட்சகர் ஒருவரை பூமிக்கு அனுப்புவேன் என்றார்.

ஏவாளைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டவை ஒட்டுமொத்தப் பெண்களின் திறன் மற்றும் குணத்திற்கு அடையாளமாக உள்ளது. காலங்கள் பல கடந்தாலும் அவளின் அடிப்படைத்தன்மை அப்படியே உள்ளது. கலாச்சாரம் என்ற போர்வையில் அவளின் ஆடை அலங்காரமும், ஒழுக்க நிலையும் மாறியிருக்கலாம். ஆனால், குணநலனிலும், செயல்பாட்டிலும் அவள் மாறாதவளாகவே உள்ளாள். அவள் எதை மாற்றினாலும் ஆதியிலே தேவன் அவளுக்குக் கொடுத்த சில பண்புகளை மாற்ற முடியாது. அவைகளில் சிலவற்றைக் கீழே காண்போம்.

## I. ஆணின் தேவைகளை சந்திக்கும் திறனை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

மனிதனின் சரீர தேவைகளை பூர்த்தி செய்ய ஒரே ஒரு வழி பெண்தான் என்பது இயற்கை

யாகவே பெண்களுக்குப் பொருந்தக் கூடியது. ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அவளுடைய சரீரமானது உன்னதமாக, அற்புதமாக தேவனால் வடிவமைக்கப் பட்டுள்ளது. பெண் பெண்மைத் தன்மையுடையவளாகவும், எல்லா சந்தர்ப்பங்களுக்கும் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளக் கூடிய சிறந்த தன்மையைப் பெற்றிருக்கிறாள். நம்முடைய சரீரங்களை பரிசுத்தமாகவும், வேத வசனம் சொல்லுகிறபடி தகுதியான உடையினாலும் காத்துக் கொண்டால் களங்கமில்லாத வாழ்க்கை வாழ இயலும்.

**II. பெண் என்பவள் தாய்மையை அடையக்கூடிய சிலாக்கியத்தை தேவனால் பெற்றிருக்கிறாள் :-**

வேதனையோடு அதே சமயம் அதிசயம் கலந்த ஆசீர்வாதமாகிய பிள்ளைப் பேற்றை தேவன் பெண்ணுக்குக் கொடுத்தார். ஒரு புதிய ஆத்துமாவை இந்த உலகத்திற்கு கொண்டுவரும் சிலாக்கியத்தை பெண்ணைத் தவிர வேறு எதற்கும் யாருக்கும் அவர் அருளவில்லை. பிள்ளைப் பேற்றில் ஆணின் பங்கு அவசியமாய் இருந்த போதிலும் பெண்ணிற்கு மட்டுமே "பிறக்கச் செய்யும் அந்த விசேஷித்த வல்லமையை கொடுத்திருக்கிறார். மனித இனமோ, அல்லது அவனின் விஞ்ஞான அறிவின் வளர்ச்சியோ ஒரு புதிய "உயிரை" இவ்வுலகத்திற்கு கொண்டு வர முடியாது.

**III. பிறருக்கு சேவை செய்யும் பொறுப்பை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.**

பெண் என்றாலே சேவை செய்பவள் என்பது பொருத்தமான ஒன்றாகும். அவள் இயற்கையிலேயே இரக்க குணமுள்ளவள், அவளின் அணுகுமுறையே மிகவும் மென்மையானதாகவும், ஆறுதலாகவும் உள்ளது. பிறரின் இக்கட்டில் அன்போடு விசாரிக்கிறாள். தன் கணவனுக்கு ஏற்றவாறு சேவை செய்யவே அடிமையாக அல்ல, அன்பினால் சேவை செய்ய சிருஷ்டிக்கப்பட்டவள் பெண். தாயாய் இருந்து அவள் ஆற்றும் சேவை அளவில்லாதது. வியாதியாய் இருக்கும் அயலகத்தாருக்கு அன்பையும், கருணையும் காட்டுகிறாள். முதியோர்களை சரியாக கவனித்துக் கொள்தல், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், தனிமையாய் இருப்பவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு ஆதரவாய் இருக்கவே பெண்களை தேவன் சரியாகப் படைத்துள்ளார்.

**IV. வீட்டை நிர்வாகம் செய்யும் திறனை தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார்.**

ஆண் வெளியே சென்று வாழ்க்கைப் போராட்டத்தில் போராட வேண்டியுள்ளது. தன் உழைப்பால் உயர் பதவியை அடைய முடியும். உலகத்தையே ஆதாயம் செய்யும் திறன் ஆணுக்கு உள்ளது. ஆனால் தேவன் பெண்களுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் விலைமதிப்புள்ள பொறுப்பைக் கொடுத்திருக்

கிறார். நாகரீகத்தின் அடிக் கல்லான வீட்டை கட்டக்கூடிய பொறுப்பு அவளுக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது.

**V. பிறரை தன் வசப்படுத்தும் தன்மையை தேவன் பெண்க ளுக்குக் கொடுத்திருக்கிறார் :-**

மனிதனின் வீழ்ச்சிக்குப் பெண்தான் காரணமாகிறாள் என்பதை நாம் பல சமயங்களில் பார்க்க முடியும். ஆதாமுக்கு தெரியும் தேவன் விலக்கி வைத்த கனியைப் புசிக்கலாகாது என்று. ஆனால் தன்னால் மிகவும் நேசிக் கப்பட்ட மனைவியினிமித்தம் தன்னை பாவத்திற்கு அனுமதித்து விட்டான். ஆதியிலிருந்தே பெண் கள் பிறரை தன்வசப்படுத்தும் திறனை நாம் அறிந்தே வருகி றோம். நம்முடைய செயல்கள் நம்முடைய குணங்களை வெளிப் படுத்துகிறது. ஆன்மீக ரீதியிலும், சரீரப்பிரகாரமாகவும், உலக சரித் திரத்தைப் பார்த்தால் பெண் களின் தாக்கத்தை நாம் கண்டு கொள்ள முடியும். யுத்தத்தின் வெற்றி தோல்வி, திருமணங்கள் கூடுவது கலைவது. மகிழ்ச்சியை பெறுவது, இழப்பு இப்படி பலவற் றைப்பார்த்தால் அதற்கு அடிப் படைக் காரணமே பெண்ணாகத் தான் இருக்கும். பெண்கள் தங்களின் குணங்களை சரிசெய்து கொள்ளாவிட்டால் பல ஆத்து மாக்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தேவன் ஒரு நல்ல நோக்கத் திற்காக பெண்களை விசேஷித்த வகையில் தூய்மையாக, அழகாக, முழுமையாக படைத்தார். ஆனால் இவளோ இதைவிட்டு வேறுவ ழியில் செல்கிறாள். தேவனின் திட்டத்தை மீறியதால் ஏவாள் துன்பத்தையும், வேதனையையும் அடைந்தாள். அதே நிலைமை தான் இன்றைக்கு நமக்கும் நேரிடு கிறது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து கொண்டி ருக்கும் நாம், ஒருவேளை ஏவா ளைவிட சற்று வித்யாசமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக் கலாம், பல்வேறு ஆடைகளை உடுத்துகிறோம், நம்முடைய அலங் காரங்கள் மாறுபடுகின்றன, நாம் வாழும் உலகம் மிக வேகமாக முன்னேறி வருகிறது, உண்மை தான். ஆனால் நம்முடைய உள்ளான மனம் நம்முடைய சகோதரியாகிய ஏவாளைப் போலவே இருந்து வருகிறது.

நாம் நம்முடைய சொந்த அனுபவங்களையே சரியென நம்பிக் கொண்டிருக்கக் கூடாது. மற்றவர்கள் செய்யும் சரியான, தவறான காரியங்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து நம்மை சரிசெய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தேவன் எதை நம்மிடம் எதிர்பார்க்கிறாரோ அதற்கு கீழ்ப்படியாமல் மீறி நடந்து அதின் மூலம் கிடைக்கும் தண்டனையைப் பெறாமல் அவரின் சித்தத்திற்கு முழுவதும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

வேதாகமத்தில் சொல்லப்படும் பல புத்தியுள்ள ஸ்திரீகளை நம்முன் வைத்து அவர்களை பின்பற்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ் வோமா?

R.R. நாயகம்

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (13)

# சபை கூடி வருதல்

சபை கூடி வருவதை விட்டு விடுவது ஒரு கிறிஸ்தவன் செய்யக் கூடிய மிக வருந்தத்தக்க தவறுகளில் ஒன்று. பிற சகோதரர்களுடன் சேர்ந்து ஆராதனையில் கலந்து கொள்ளுவதைத் தவிர்த்து கர்த்தருக்கு கனம் செய்யாவிட்டால், கர்த்தருக்கு விசுவாசமாக இருப்பதாக ஒருவன் எப்படி சொல்ல முடியும்? அதாவது, இப்படியான நிலைமைகளில் ஒருவன் விசுவாசமாக இருக்க இயலாது.

பல நாமகரணக் கூட்டத்தைச் சார்ந்த மக்கள் வருடத்திற்கு இரு முறை மட்டுமே ஆராதனை வழிபாட்டில் கலந்து கொள்ளுகின்றனர். அவை தேவனுடைய வசனத்தில் கற்பிக்கப்படாத கிறிஸ்துமஸ், ஈஸ்டர், என்ப வைகளாகும். ஆனால் கர்த்தரைப் பிரியப்படுத்த இது மட்டும் போதும் என நினைத்துக் கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் நிறைய மக்கள் உள்ளனர். கர்த்தர் யார் என்று அவர்கள் நினைக்கின் றனர்? ஆனால், இன்னும் நெருங்கி வந்தால், சபை அங்கத்தினரில் பலர் கூட ஆராதனையில் கலந்து கொள்ளுவதில்லை. ஏதாவது ஒரு சாக்கு போக்கை மாற்றி மாற்றிச் சொல்லுகின்றனர். ஆராதனைக்கு வரத்த டையாக இருப்பது ஒன்றில்அவர்களுடைய வேலை அல்லது அதிக தூரம்! அது, இது அல்லது எதுவோ ஒன்று' என சாக்குச் சொல்லுவர். ஆனால் கேள்வி என்னவென்றால் : கர்த்தர் இந்த சாக்குப் போக்குகளை ஏற்றுக் கொள்ளுவாரா? இங்கே இந்த தனிப்பட்ட மனிதர்கள் தாங்கள் கிறிஸ்தவர்கள் என உரிமை கொண்டாடுகின் றனர். ஆனால் அவர்கள் ஒருபோதும் ஆராதனையில் கலந்து கொள்ளு வதில்லை. அதற்கு மாறாக, அவர்கள் செய்ய விரும்பும் சொந்தக் காரியங்கள் எதற்கும் ஒரு போதும் தடை எதுவும் வருவதில்லை. பணி செய்யும் இடம் பத்து கிலோமீட்டர் தூரம் இருப்பினும், அதற்குத் தவறாமல் செல்ல முடிகிறது.

"ஆனால், நான் வீட்டில் ஜெபம் செய்கிறேனே?" என்பது ஆராத னைக்கு வரத்தவறும் சிலரின் வழக்கமான வாதமாக இருக்கும். அது மிகவும் நல்ல காரியந்தான், கர்த்தர் அது மட்டும் போதும் என்று கூறியி ருந்தார்" என்றாலும், அவருடைய மக்கள் வாரத்தின் முதல் நாள் கூடி வரவேண்டுமென்று அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாரே! அப்படி கூடி வரும் போது, அவர்கள் ஜெபம் செய்வதோடு மட்டுமல்ல,

ஆனால் கற்றுக் கொள்ளவும், பாடவும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவும், தங்களால் இயன்ற அளவில் கொடுக்கவும் வேண்டியதாயிருக்கிறது. இப்போது, தாங்களே வீட்டில் ஆராதிக்க முயலும் சிலர், தங்களுடைய காணிக்கைப் பணத்தை யாரிடம் கொடுப்பார்கள்? கர்த்தர் பந்தியை எப்படி நடத்துவர்? இல்லை. இப்படிப்பட்ட தனிப்பட்டவர்களில் பலர், அதிகமாகப் போனால், தங்களுடைய ஆராதனையில் கர்த்தருக்கு ஜெபம் ஏறெடுப்பதற்கு மேல் சென்று விடுவதில்லை. தேவனிடம் ஜெபம் செய்வதற்கும் மேலான காரியங்கள் ஆராதனையில் உண்டு என்பதை அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டியதாகிறது.

வியாதி அல்லது இன்னபிற தெய்வாதீனமாக ஏற்படும் காரியங்களால் கிறிஸ்தவர்களுக்கு ஆராதனைகளில் கலந்து கொள்ள முடியாமல் தடைபட்டுப் போவது சில வேளைகளில் உண்மையே. இந்த காரியத்தில் சாக்கு போக்குச் சொல்லத்தேவையில்லை. ஆனால் வராமலிருக்க ஒரு காரணம் இங்கு இருக்கிறது. மேலுமாக, வராமலிருக்க ஒரு சரியான காரணத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்வார்; ஆனால் ஒரு சாக்கு போக்கை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஆனால் இப்போது, சபை கூடி வருவதைப் பற்றி தேவனுடைய வசனமே கூறுவதைக் கவனிப்போம். எபிரேய எழுத்தர் எழுதுகிறார் : "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்;வாக்குத் தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாக இருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்". (எபி. 10 : 23-27). இப்போது, இவற்றின் முக்கிய கருத்துகளைக் கவனிப்போம்.

1. நாம் தொடர்பு கொண்டுள்ள ஒருவர், நம்முடன் தொடர்பு கொள்ளும் போது உண்மையுடன் இருப்பதைப் போல நாமும் அவரிடம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.
2. ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் எப்போதுமே நற்கிரியைகளை தொடர்ந்து செய்ய வேண்டும்.

3. நாம் கூடி வருவதை விட்டு விடலாகாது. அன்றும் சிலர் விட்டு விட்டனர். இன்றும் கூடிவருதலை சிலர் விட்டு விடுகின்றனர். ஆனால் இது கர்த்தரின் விருப்பம் அல்ல.

4. நாள் நெருங்கி வரும் போது, அதாவது கர்த்தரின் நாளாகிய ஆராதனை நாள் நெருங்கி வரும் போது, சபை கூடுவதில் கலந்து கொள்ள ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த வேண்டும். அதாவது, அந்நாளுக்காக நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய ஒரு வாரம் முழுவதும் நமக்கு இருக்கிறது.

5. சத்தியத்தைக் கற்றுக் கொண்டபின், வேண்டுமென்றே நாம் பாவம் செய்தால், நமக்காக எந்த பலியும் இனி இல்லை என்பதையும், நியாயத் தீர்ப்பையும் சாபத்தையும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, நாம் வேண்டுமென்றே சபை கூடி வருதலைப் புறக்கணித்து, நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்யத் தவறினால், அவரை நாம் புறக்கணித்த பின், கர்த்தர் நம்மை எப்படி இரட்சிக்க முடியும்? எனவே, தொடர்ந்து இவ்வாறு நாம் வாழ்ந்தால் நாம் வீழ்ந்து போவோம்.

சபை கூடி வருவதில் நாம் பங்கு பெற வேண்டுமென கர்த்தர் எதிர் பார்க்கிறார் என்பதால் தான் இவை அனைத்தையும் நாம் கூறக் காரணமாக இருக்கிறது. இது அலட்சியப்படுத்த முடியாத காரியம். நாம் தவறுவோமானால் ஆபத்தான காரியமும் கூட. ஆனால், நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென்று அவர் ஏன் கேட்டிருக்கிறார்? ஏன் சபை கூடி வருவதில் கலந்து கொள்ள வேண்டும்? அதற்கு பல காரணங்கள் உள்ளது. சிலவற்றை நாம் கவனிப்போம் :ஏனென்றால் கட்டளையாலும், உபதேசத்தாலும் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென உபதேசிக்கப்பட்டுள்ளது. 'நாம் கூடி வருவதை புறக்கணிக்கலாகாது என ஏற்கனவே எபிரேயர் 10: 25ம் வசனத்தில் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். பின்னர், ஆதிக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஆராதனை செய்ய கூடினார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடி 2 : 42ம் வசனத்திலும், பவுலும் கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்தில் வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கக் கூடி வந்ததைப் பற்றி அப்போஸ்தலர் நடபடி 20 : 7ம் வசனத்திலும் நாம் படிக்கிறோம். ஆகவே, நாமும் அவ்வாறு செய்ய வேண்டும்.

2. தேவனை ஆராதிக்க நாம் கூடி வரவேண்டும். உண்மையாகத் தொழுது கொள்ளுபவர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார்

என்றும், தேவன் ஆவியாய் இருப்பதால் நாம் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழ வேண்டுமென யோவான் 4 : 23, 24 வசனங்களில் கிறிஸ்து நமக்குக் கூறுகிறார்.

3. கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டு அவரை நினைவு கூறத்தக்கதாக நாம் கூடி வருவதை கர்த்தர் ஏற்படுத்தினார். கர்த்தரின் பந்தி ஏற்படுத்தப்பட்டதைப் பற்றி பவுல் கூறும் போது, கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பத்திலும் கிறிஸ்துவின் இரத்தத்தின் நினைவாக இரசத்திலும் பங்கு பெற வேண்டுமென்று காட்டுகிறார். (1 கொரி. 11 : 24 - 25). கர்த்தரை எவ்வாறு நினைவு கூறவேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அவ்வாறு அவரை நினைவு கூற வேண்டுமானால் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் கூடி வராவிட்டால் எப்படி சாத்தியமாகும்?

4. நமது வரவுக்குத் தக்க கொடுப்பதற்காக நாம் கூடி வரவேண்டும். மீண்டுமாக, நாம் 1 கொரிந்தியர் 16 :2ம் வசனத்திற்குத் திருப்பிக் கொண்டால், வாரத்தின் முதல் நாள் நாம் கூடி வந்து நமது வரவுக்கேற்ப கொடுக்க வேண்டும் என பவுல் கூறுவதைக் காணலாம். நாம் கூடி வராத பட்சத்தில் நமது கொடுத்தலின் நிலை என்ன? நாம் சுகவீனமாக இருப்பின் அடுத்துவரும் கர்த்தரின் நாளிலே நாம் அதைக் கொண்டு வரமுடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கூடி வரத் தவறும் பலர், கொடுக்கும் சந்தர்ப்பத்தை இழந்து போவது மட்டுமல்லாமல் எவ்வித பொறுப்பு உணர்ச்சியும் இன்றி மீண்டும் மீண்டுமாக தொடர்ந்து தவறுகின்றனர்.

5. சபை கூடி வரும்போது நமது மத்தியிலே கர்த்தர் இருப்பதாக வாக்களித்துள்ளார். அவருடைய வாக்குத்தத்தத்தைப் பாருங்கள் : "ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்". (மத்தேயு 18 : 2). சபையின் ஒவ்வொரு ஆராதனையிலும் நாம் பங்கு கொள்ள இது ஒன்றே போதுமான காரணமாக இருக்கிறது. ஏனெனில் கர்த்தர் அங்கிருப்பதாகக் கூறியிருக்கிறாரே. நம் நாட்டு பிரதமர் அல்லது வேறு முக்கியமான ஒரு தலைவர் வரும் இடத்தில் தாம் இருக்க விரும்பமாட்டோமா? ஆனால் இங்கே ஒருமுறை மட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் நம்மை சந்திப்பதாக கர்த்தரே கூறியிருக்கிறார். நான் அங்கே இருப்பேன் என அவர் கூறியிருக்கும் போது, நிச்சயமாக எல்லாவற்றிலும் முக்கியமான இந்த சந்திப்பை நாம் தவறவிட விரும்பமாட்டோம்.

6. ஒவ்வொரு சந்திப்பிலும் நாம் தவறாது கலந்து கொண்டு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும். நமது குடும்பத்தினர்கள், நேசிப்பவர்கள், நண்பர்கள், பொதுவாக உலகத்தின் மக்கள் அனைவரும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். பின்பற்ற வேண்டிய ஒரு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் நம்மை அவர்கள் பார்க்கின்றனர். இதை நாம் உணர்ந்து கொண்டு, அவர்களை சரியானதிசையில் வழிநடத்த முயலவேண்டும். நீங்கள் நினைப்பதைவிட, அவர்களுடைய இரட்சிப்பு நமது செயல்களைப் பொருத்திருக்கக் கூடும். தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதினார். "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தைக் ஏற்றுக் கொண்டு எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்." (1 தெச. : 6, 7) மக்கள் நம்மைப் பின்பற்றும் போது, உண்மையில் கிறிஸ்துவையே அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்ற ஒரு முன்னுதாரணமாக நாம் செயல்படுகிறோமா? அவ்வாறு நாம் நடக்க வேண்டும். ஒவ்வொரு தடவை சபை கூடி வரும் போதும் தவறாமல் நேரத்திற்கு வரவும், அமைதியாக இருக்கவும், பய பக்தியுடனும் கர்த்தரை உண்மையாகவும் தொழுது கொள்ள இப்போதே திட்டமிடுங்கள்.

7. ஐக்கியத்திற்காகவும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும் நாம் கூடி வருவதில் தனிப்பட்ட முறையிலோ கூட்டாகவோ, பங்கு பெற வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒரு போதும் கூடிவராவிட்டால், அந்தக் குறிப்பிட்ட பகுதி அல்லது நகரிலே சபையின் நிலைபற்றி என்ன சொல்ல முடியும்? கூடி வராதபட்சத்தில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முடியாது, அவர்களுடைய பலத்தை புரிய முடியாது, வேலை திட்டமிட முடியாது, ஒருவருக்கொருவர் உதவ இயலாது, ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த முடியாது. வேறுவிதமாகச் சொன்னால், சபையின் பல வேலைகள், அதின் பலம், அதின் செயல்பாடுகள் போன்ற அனைத்துக் காரியங்களும் சபை கூடி வருவதையே பலமாகச் சார்ந்துள்ளது. உண்மையிலே இவை இல்லாது போனால் சபை விரைவில் மடிந்து போகும். எனவே தான், புதிய ஏற்பாட்டில் சபை கூடி வருதலைப் பற்றி எப்போதும் நீங்கள் படிக்கிறீர்கள். எங்கெல்லாம் பவுலும் பிற சகோதரர்களும் சென்றனரோ அங்கெல்லாம் பிராந்திய சபைகளைச் சந்தித்தனர். சபையைத் துன்புறுத்திக் கொண்டிருந்த வேளைகளிலும் கூட சபை உறுப்பினர்கள் சந்திக்க வழிகளையும் சந்தர்ப்பங்களையும் கண்டு கொண்டனர். அது

போலவே நாமும் கர்த்தரை ஆராதிக்கவும் அவருடைய பணியைச செய்யவும் இன்று தொடர்ந்து கூடிவருவது மிகவும் அவசியமாகும்.

எனவே இவை, சபை கூடி வரும் போது நாம் ஏன் அதில் பங்கு பெற வேண்டும் என்பதற்கான சில காரணங்கள் தான். ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது எப்போதாவது போனால் போதும் என்ற அடிப்ப டையில் இல்லாமல், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அல்லது சபை கூடி வர முடிவு செய்யும் சகல நாட்களிலும் நாம் செல்ல வேண்டும். சுவிசேஷம் கூறுகிறது : "சபை கூடி வருதலை விட்டு விடலாகாது". சபை கூடி வரும் எல்லா சந்தர்ப்பங்களையும் இது குறிக்கும். நமது வாழ்வில் ஆராதனைக்கு முதல் இடம் தந்து, நாம் அவருக்கு உண்மையாக வாழ்ந்திட நமது கர்த்தர் உதவி செய்வாராக! இந்த வழியில் நாம் அவருக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் போது, பிற அனைத்து வழிகளிலும் நாம் அவருக்கு விசுவாசமாக இருப்போம்.

J.C. சோட்

"புதிய ஏற்பாட்டு ஆராதனை" என்ற தொடர் இந்த 13வது கட்டு ரையுடன் முடிவு பெறுகிறது.)

| பழைய உடன்படிக்கை | புதிய உடன் படிக்கை |
|---|---|
| 1. கற்பலகையில் எழுதப்பட்டது | 1. இருதயத்தில் எழுதப்பட்டது |
| 2. எழுத்துக்குரியது | 2. ஆவிக்குறியது |
| 3. எழுத்து கொல்லுகிறது | 3. ஆவியோ உயிர்ப்பிக்கிறது. |
| 4. குறைந்த மகிமையுள்ளது | 4. அதிக மகிமையுள்ளது |
| 5. ஒழிந்து போகக்கூடியது | 5. நிலைத்திருப்பது |
| 6. மரணத்திற்கேதுவானது | 6. ஜீவனுக்கேதுவானது |
| 7. ஆக்கினைத் தீர்ப்பை கொடுக்கக் கூடியது | 7. நீதியான தீர்ப்பை கொடுக்கக் கூடியது |

**II கொரிந்தியர் 3 : 1–18.**

# இயேசுவை யோவான் அறிமுகப்படுத்துகிறார்

நீங்கள் இயேசுவை எவ்வாறு அறிமுகப்படுத்துவீர்கள்? அவர் யார் என பிறர் உண்மையிலேயே புரிந்து கொள்வார்களா? இயேசுவை அறிமுகப் படுத்த, யோவான் 1ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் யோவான் பத்து அடைமொழிகளை பயன்படுத்துகிறார்.

அவர் வார்த்தையாக இருக்கிறார் : "ஆதியிலே வார்த்தை இருந்தது . . ." (யோவான் 1 : 1). ஒரு மனதிலிருந்து மற்றொன்றுக்கு வார்த்தைகள் எண்ணங்களை பரிமாற்றம் செய்கின்றன. "மரம்" என்னும் வார்த்தை, நமது மனதிலே ஒரு மரத்தைத் தோற்றுவிக்கிறது. நம்மோடு தொடர்பு கொள்ள தேவன், எழுதிய வார்த்தைகளை வேதாகமத்தில் பயன்படுத்துகிறார். ஆனால், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான சிறப்பான தொடர்பு இயேசுவே, இயேசுவின் வாழ்க்கையை நாம் எவ்வளவுக்கு அதிகமாகக் கற்றுக் கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்குத் தெளிவாக தேவனுடைய பரிசுத்தம், வல்லமை, ஞானம், அன்பு ஆகியவற்றை நாம் காண்கிறோம்." . . . . . என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் . . . ." (14:9). இயேசு "அவருடைய (தேவனுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார்." (எபி. 1 : 3); " . . . தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது". (கொலோ. 2 : 9). எனவே, இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி பூரணமாகக் கற்று கொள்ளுவது, தேவனிடத்தில் நாம் விசுவாசமாக இருக்கத் தூண்டுகிறது. (1 பேதுரு 1 : 26).

அவர் தேவனாக இருக்கிறார் : " . . . . அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது." (1 : 1; பார்க்க 20 : 28) "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் . . ." (10 : 30). உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னரே பரலோகத்தில் அவர்கள் ஒன்றாயிருந்தனர். (3 : 13, 17 : 5) குமாரனாகிய தேவன் வழியாக பிதாவாகிய தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினார். "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை". (1 : 3, பார்க்க : எபி. 1:2; கொலோ. 1:16; ஆதி. 1: 26). சரியான காலத்தில், குமாரன் தம்மைத் தாமே வெறுமையாக்கி, மனித ரூபமெடுத்து, நமக்காக வாழ்ந்து, மரித்து, மீண்டுமாக மகிமைப்படுத்தப்பட்டார். (பிலிப். 2 : 5- 11;

பார்க்க : யோவான் 14 : 28; 5 : 22- 23; 1 கொரி. 15 : 24 - 28).

அவர் ஒளியாக இருக்கிறார் : "அவன் (யோவான் ஸ்நானகன்) தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக் (இயேசு) குறித்துச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்தான். (1 : 7). ஒளி அறிவையும் மகிழ்ச்சியையும் தருகிறது. நமது எல்லையை நோக்கி சரியாகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்ய ஒளி வழி வகுக்கிறது. "நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை (பிதாவாகிய தேவனின் அவசியமும் கிருபையும்) இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்". (2 தீமோ. 1 : 10).

அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார் : "அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய . . . " "தேவனுடைய குமாரன்" ( 1 : 14, 34; பார்க்க 1 : 18; 3 : 16). சகல மக்களும், " ஆவியின் பிதாவாகிய " (எபி. 12 : 9) "தேவனுடைய சந்ததியாராக" (அப். 17:29) இருக்கின்றனர். ஒரு ஆண் அல்லது பெண்ணின் மாம்ச சரீரத்தில், தேவன் உருவாக்கும் வரை அவர்களிடம் ஆவியானது இருப்பதில்லை. அவர் "மனிதனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிறார்" (சகரியா 12 : 1). ஆனால் இயேசுவின் ஆவி அவருடைய மாம்ச சரீரத்திற்குள் தொடங்கவில்லை. மிகப் பெரிய ஒரு அற்புதத்தின் மூலமாக, மேரி என்ற ஒரு கன்னிகையிடத்தில் தேவன் இயேசுவின் சரீரத்தை உண்டாகச் செய்தார். ஆனால் அவருடைய மாம்ச சரீரம் உருவாக்கப்படுவதற்கு முன்பே, இயேசு கிறிஸ்துவின் ஆவியானது ஜீவனுள்ளதும், ஊக்கமுள்ளதாகவும் இருந்தது. கிறிஸ்துவுக்கு உண்டாகும் பல பாடுகளைப் பற்றி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் "கிறிஸ்துவின் ஆவியானவரால்" முன்னறிவித்தனர். (1 பேதுரு 1 : 11). பெத்லகேமிலிருந்து புறப்பட்டு வந்தவராகிய இயேசுவின் "புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5 : 2). இயேசுவுக்கு ஒரு மானிட தாய் இருந்தார்; ஆனால் மானிட தந்தை கிடையாது. அவர்" தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறார்". (8 : 42).

அவர் இயேசுவாக இருக்கிறார் : " . . . கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டாயின". ( 1 : 17). இயேசு என்பது அவருடைய மனிதப் பெயர். மரியாளுக்கும் யோசேப்புக்கும் தேவ தூதர்கள் அதை வெளிப்படுத்தினர். (லூக்கா 1 : 31; மத். 1: 21). பிற மனிதர்களும் கூட "இயேசு" என்ற பெயரில் இருந்தனர். (கொலோ. 4 : 11). எனவே, எந்த இயேசு என மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதாக இருந்தது.

ஆகவே, "யோசேப்பின் குமாரனாகிய, நசரேயனாகிய இயேசு' என அவர் அடையாளம் காணப்பட்டார். (1 : 45). இயேசுவை மாம்ச பூர்வமாக உருவாக்கிய தந்தையாக இல்லாவிட்டாலும், யோசேப்பு இயேசுவின் ஒரு மானிட தந்தையாக அல்லது சட்ட பூர்வமான தந்தையாக செயல் பட்டார். பழைய ஏற்பாட்டில்" யோசுவா" என்பது போல "இயேசு" என்றால் "இரட்சிப்பவர்" என்று பொருள். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலை மனித எதிரிகளிடமிருந்து யோசுவா காப்பாற்றினார். அடிமைத்தனம், குற்றம், பாவத்தின் நித்திய சாபம் இவை அனைத்திலிருந்தும் இயேசு நம்மை இரட்சிக்கிறார்.

அவர் கிறிஸ்துவாக இருக்கிறார் : " . . . இயேசு கிறிஸ்துவின் மூலமாய் . . . . மேசியாவைக் கண்டோம் " (மேசியா என்றால் கிறிஸ்து எனப் பொருள்). (1 : 17; 41)." மெசயா" என்பது பழைய ஏற்பாட்டின் எபிரேய மொழியிலிருந்தும், " கிறிஸ்து" என்பது புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழியிலிருந்தும் வந்த வார்த்தைகள். இரண்டுமே "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள்படும். தேவனிடமிருந்து வரும் அதிகாரங்களும் ஆசீர்வாதங்களும் அபிஷேகம் பண்ணப் பட்டவரின் பேரில் பொழியப். பட்டு, அவருடைய கடமைகளைச் செய்ய உதவின. பழைய ஏற்பாட்டு நாடாகிய இஸ்ரவேலுக்கு ஆரோனை பிரதான ஆசாரியனாக அபிஷேகம் பண்ண, மோசே அவன் தலையில் அபிஷேகத் தைலத்தை ஊற்றினான். (லேவி. 8 : 12); எலிசாவை ஒரு தீர்க்கதரிசியாக எலியா அபிஷேகம் செய்தான். (1 ராஜாக்கள் 19 : 16); தாவீதை அரசனாக சாமுவேல் அபிஷேகம் செய்தான். (1 சாமுவேல் 16 : 1, 13). நமது பிரதான ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவும், ராஜாவாகவும் இருக்க (எபி. 3:1; அப். 3: 22-23; யோவான் 12 : 14-15). தேவனால் இயேசு அபிஷேகம் செய்யப்பட்டார். (1 : 32 -34; லூக்கா 4:18, 21; அப். 10 : 38).

அவர் கர்த்தராக இருக்கிறார் : " ... கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள்". (1 : 23). இஸ்ரவேல் நாட்டில் பல "கர்த்தர்கள்" இருந்தனர். இதன் பொருள் "அதிகாரி", "முதலாளி" அல்லது எளிமையாக "ஐயா" என்பதாகும். மரியாதைக்கும் உபசரிப்புக்குமான ஒரு பட்டம். பல கர்த்தர்கள் மக்களையும் சொத்துக்களையும் ஆண்டனர். இயேசு "கர்த்தாதி கர்த்தர்" (வெளி. 17 : 14). தேவன் அவர் மூலமாக நம்மைப் படைத்ததால், நம்மை ஆள அவர் உரிமை உள்ளவர். மேலுமாக, நமது இரட்சிப்புக்கான கிரையத்தை அவர் செலுத்தியபடியால், இயேசு நம்மீது உரிமையுள்ளவர்: "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய

மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது". (எபே. 1 : 7; பார்க்க : அப். 20:28; 1 கொரி. 6: 19 -20; ரோமர் 6 : 17 -18). தேவனிடமிருந்து தமது அதிகாரத்தை "கிறிஸ்து" காண்பிப்பது போல,"கர்த்தர்" தமது அதிகாரத்தை நம்மீது காட்டுகிறார்.

அவர் தேவனுடைய ஆட்டுக்குட்டி: ". . . . இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி". (1 : 29). பழுதற்ற மிருகங்களை தேவனுக்கு பலி செலுத்த வேண்டும் என பழைய ஏற்பாடு அடிக்கடி குறிப்பிட்டது. (யாத்திராகமம் 12 : 4-5; லேவி. 22 : 18-21). பாவப் பரிகாரத்திற்காகவே பல மிருக பலிகள் செலுத்தப்பட்டன. (யாத். 29: 14; லேவி. 4) என்ற போதிலும், பாவங்களை நீக்க மிருக பலிகளுக்கு உண்மையான வல்லமை இல்லாதிருந்தது. (எபி. 10 : 4). அதற்குப் பதிலாக, அந்தப் பழைய ஏற்பாட்டு பலிகள், பாவங்களை அகற்றும் வல்லமையுள்ள இயேசு கிறிஸ்துவின் பலியை முன்னுரைக்கக் கூடிய தீர்க்க தரிசனங்களாக விளங்கின. (எபி. 10 : 1; ஏசாயா 53; எபி. 9 : 11-15; 1 கொரி : 5 :7). உலகத்தைத் தேவன் படைப்பதற்கு முன்னரே, நமது பாவங்களுக்காக மரணத்தைச் சந்திக்க இயேசுவை தாம் அனுப்பப் போவதை தேவன் அறிவார். (1 பேதுரு 1: 18-21; எபே. 3 : 11; 1 :7). நமது பாவங்களை எடுத்துப் போடும் சக்தியுள்ள ஒரே பலி அவரே. ஏனெனில், நம்மைப் போல சோதிக்கப்பட்டும், ஒரு பாவத்தையும் செய்யாத ஒரே ஒருவர் அவர் மட்டுமே (எபி. 4 : 15; (பேதுரு 1 : 19; 2 : 22). ஆவிக்குரிய எந்தப் பழுதும் அற்றவராக இயேசு இருந்தார். பாவத்தின் சம்பளம் மரணம். (எசேக்கியேல் 18 : 20; ரோமர் 6 : 23; பார்க்க : ஏசாயா 59 : 1-2). தமது சொந்தப் பாவங்களுக்காக மரண தண்டனையை அடைய இயேசுவுக்கு தேவை இல்லாதிருந்தது; ஏனெனில் அவர் பாவமற்றவராக இருந்தார். எனவே நமக்குப் பதிலாக நமது இடத்தில் இருந்து அவர் மரண தண்டனையை ஏற்றுக் கொண்டார். "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (1பேதுரு 3 : 18).

அவர் போதகராக இருக்கிறார் : ". . .ரபீ (என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.)" (1 : 38), வீடுகளிலும், ஆலயங்களிலும், ஜெபக் கூடங்களிலும், சாலைகளிலும், மலைகளிலும், கடற்கரைகளிலும், கடலிலும் அவர் போதித்தார். அவருடைய வல்லமை படைத்த செய்திகளும், கற்றுக் கொடுத்த விதமும் மக்களை ஆச்சரியப்பட வைத்தன. (மத். 7 : 28 -29; யோவான் 7 : 45 - 56). அவருடைய உபதேசங்கள் தேவனிடமிருந்து வந்தன என்பதை அவர் செய்த அற்புதங்கள் தெளிவாக்கின. (யோவான் 3 : 2)

அவர் இஸ்ரவேலின் இராஜா : "... ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் இராஜா" என்று நாத்தான் வேல் கூறினான். (1 : 49). "இஸ்ரவேல்" என அவன் எதைக் குறிப்பிடுகிறான்? ஆபிரகாமின் சரீர சந்ததிகளைப் பற்றி அவன் கூறினானா? இல்லை. "... இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே . . . மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத் தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்" (ரோமர் 9 : 6, 8). ஒரு பாவி நற்செய்தியைக் கேட்டு, அதை விசுவாசித்து, அவன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கை செய்து, தனது பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் முழுகி, திருமுழுக்குப் பெறும் போது அவன் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகிறான். கலாத்திய நாட்டு மக்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் போது தேவனுடைய பிள்ளைகளாகவும் வாரிசுகளாகவும் ஆனார்கள்: "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே". (கலாத்தியர் 3 : 26, 27). "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத் தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலா. 3:29). இன்று, சகல தேசங்களிலுமுள்ள யூதர்களையும், யூதரல்லாதவர்களையும், நற்செய்திக்குக் கீழ்ப்படியவும், அவருடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபை என்னும் "பரிசுத்த தேசத்தின்" ஒரு அங்கமாகவும் கர்த்தர் அழைக்கிறார். (1 பேதுரு 2 : 9; பார்க்க : மத். 16: 18-19; 28 : 19; ரோமர் 1 : 16; 16 : 16). கிறிஸ்தவர்கள் "தேவனுடைய இஸ்ரவேலர்கள்". (கலா. 6 : 16). "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்". (கொலோ. 1 : 13). இயேசு "இராஜாதி இராஜா". (வெளி. 17 : 14).

எனவே, நமக்கு வார்த்தையை, தேவனை, ஒளியை, தேவனின் ஒரே பேறான குமாரனை, இயேசுவை, கிறிஸ்துவை, கர்த்தரை, தேவ ஆட்டுக் குட்டியை, போதகரை, இஸ்ரவேலின் இராஜாவை ஒரு அதிகாரத்தில் யோவான் அறிமுகப்படுத்தி இருக்கிறார்! இவ்வுலகில் சமாதானமான வாழ்வுக்கும், பரலோகத்தில் நீடிய நித்திய ஜீவனுக்கும், நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவர் ஒருவர் மட்டுமே அளிக்க வல்லவராக இருக்கிறார். (யோவான் 6 : 68; 10 : 10; எபே. 1:3; 1 தீமோ. 4:8).

Royce Frederick

தமிழில் எஸ். எஸ். ராஜன்.

# இரட்சிப்பு என்று ஒன்று உண்டா?

இன்று உலகில் அநேகர் குறிப்பாக படித்தவர்கள் மத்தியில் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி உண்மையாகவே இரட்சிப்பென்று ஒன்று உண்டா? என்பதாகும். ஆங்கிலத்தில் REDEMPTION - மீட்பு. SALVATION - இரட்சிப்பு; FORGIVENESS OF SIN பாவமன்னிப்பு என்ற வார்த்தைகள் இரட்சிப்பைக் குறிக்கின்ற வெவ்வேறு வார்த்தைகள்.

பாவமன்னிப்பைக் குறித்து அநேக போதனைகள் உலகில் உண்டு. எல்லா மதங்களும், மார்க்கங்களும் தீமை விட்டு மனந்திருந்தி நீதியான வழியில் வாழ வேண்டுமென்று போதிக்கின்றன.

இதிலிருந்து வாழ்க்கையில் நீதியும், அநீதியும் உண்டு என்பது நன்கு தெரிகின்றது. இந்த அநீதியிலிருந்து, அதாவது பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவதுதான் இரட்சிப்பு.

யார் மனிதனை அவனுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கக்கூடும்?

இன்று உலகில் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் அபாயத்திலிருந்து யார் நாட்டைக் காப்பாற்ற முடியும்? என்ற கேள்வி எழும்போது, ஒரு குறிப்பிட்ட தலைவரால் தான் முடியும் என்று பெரும்பான்மை மக்கள் சொல்லுவதைக் கேட்கிறோம். அதுபோலவே மனுக்குலத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க கடவுளின் திட்டத்தினால் மட்டுமே முடியும். தேவன் மனிதனையும் மனுஷியையும் உண்டாக்கி அவர்களுக்கு ஆதாம், ஏவாள் என்று பெயரிட்டு ஏதேன் என்னும் தோட்டத்தில் சகல ஆசீர்வாதங்களுடன் வைத்தார். ஆனால் இருவரும் சாத்தானின் வஞ்சனையால் விலக்கப்பட்ட கனியைப் புசித்தபோது பாவம் முதலாவது மனுக்குலத்திற்குள் பிரவேசிக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஏதாவது ஒரு பாவம் அவரை தேவனிடமிருந்து பிரித்து உலக அநீதியில் கொண்டுபோய் விடுகின்றது ரோமர் 3 : 23.

கடவுள் இந்த மனுக்குலத்தை முற்றிலும் இரட்சிக்க சித்தங் கொண்டு தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த பூவுலகுக்கு அனுப்பினார். வேதப் புத்தகத்திலே இயேசு என்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீங்கி அவர்களை இரட்சிப்பார் என்று மத்தேயு 1:21ல் சொல்லப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்ததன் நோக்கம்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது என்று 1 தீமோத்தேயு 1 : 15ல் பவுலடியார் தெளிவாக குறிப்பிடுகின்றார்.

"ஆக எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (கடவுள்) சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று 1 தீமோத்தேயு 2 : 4ல் குறிப்பிடுகின்றார்.

இவைகளை கூர்ந்து நோக்குங்கால் தேவன் மனுக்குலத்தின் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பதையும், அவர்களைச் சகல பாவத்தி னின்றும் மீட்டு மகிழ்ச்சியாக வாழச் செய்ய சித்தமுள்ளவராயிருப்ப தையும் அதன் பொருட்டே தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் எல்லோ ருடைய பாவங்களையும் சுமந்து தீர்த்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே மரணத்தை வென்று உயிர்த்தெழச் செய்தார் என்ப தையும் தெளிவாக அறியமுடியும்.

இந்த மாபெரும் உண்மைகள், நிச்சயமாகவே இரட்சிப்பு உண்டென்பதை பறை சாற்றுவதை ஐயமற உணர முடியும். இந்த இரட் சிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்போம்.

1. முதலாவது இரட்சிப்பைக் குறித்த உண்மைகளைத் தெளிவாகக் கேட்டு புரிந்து விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத் தினாலே வரும் ரோமர் 10 : 17

விசுவாசம் என்றால் என்ன?

நீங்கள் கடவுளிலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவி னாலும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வேத வாக்கி யங்களை நம்பி அதன்படி செயல்படுவதே விசுவாசம். பின்வரும் வேத வாக்கியங்கள் இதை நமக்கு தெளிவுபடுத்தும்.

1. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறா ரென்றும் விசுவாசிக்க வேண்டும். எபிரெயர் 11 : 6

2. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்க ளுக்குச் சொன்னேன். நானே அவர் என்று விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் - யோவான் 8 : 24.

3. ஆனால் விசுவாசம் மட்டுமே உங்களை இரட்சித்து நீதிமானாக்கப் போதுமானதல்ல என்ற உண்மையை யாக்கோபு 2:24ல் காண்கிறோம்.

4. அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே இரட்சிக்கும் என்ற சத்தியத்தை கலாத்தியர் 5 : 6ல் வாசிக்கிறோம்.

தேவனுக்கேற்ற துக்கம் உங்களை பாவத்திலிருந்து மனந்திருந்தி வாழ வழி நடத்த வேண்டும்.

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது 2 கொரிந்தியர் 7 : 10.

5. நாம் விசுவாசித்து மனந்திருந்தியதற்குப் பின்பு இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும். பின்வரும் வேத வாக்கியங்கள் இதைத் தெளிவாக்குகிறது.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் ரோமர் 10 : 10

6. இரட்சிக்கப்படும்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்னானம் பெற வேண்டும்.

அ) விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்னானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் . . (மாற்கு 16 : 16.

ஆ) இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்னானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் அப்போஸ்தலர் 22 : 16

இரட்சிக்கப்படுவதற்கு மேற்சொல்லப்பட்டிருக்கும் வேத வாக்கியங்களைப் படித்து விசுவாசித்து மனப்பூர்வமாக இவைகளின்படி செயல்பட்டால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் இதில் நாம் எதையாவது முன்னுக்குப் பின் முரணாகச் செய்வது வேதத்துக்கு மாறுபடுமாதலால் இரட்சிக்கப்பட முடியாது. ஆகவே நாம் சரியாக வேதத்தின் போதனைகளின்படி செய்ய கவனமாயிருப்போம்.

இந்தப் பிரகாரம் இரட்சிக்கப்பட்டபோதே தேவன் வாக்களித்த பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின்

நாமத்தினாலே ஞானஸ்னானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அப்போஸ்தலர் 2 : 38

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நாளும் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான போதனைகளின்படி மட்டுமே வாழ்ந்தால் இம்மையில் தேவசமாதானம் சந்தோஷம். ஆசிர்வாதங்கள் மறுமையில் நித்திய ஜீவன் கிடைப்பது உறுதியே.

**பின்வரும் வேத வார்த்தைகளை ஆழ்ந்து நோக்கவும்:**

1. மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை தருவேன் வெளிப்படுத்தல் 2 : 10

2. ஏனெனில் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரன்னமாகி நாம் அவ பக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி. . . . தீத்து 2 : 11, 12;

3. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் 2 பேதுரு 3:18.

இப்பேருண்மைகளை வாசிக்கும் அன்பரே உலகில் நிலையற்ற அநேகத்தின் பேரில் மனிதன் தன் மனத்தைச் செலுத்தி ஆராய்ந்தும் முடிவில் சமாதானமின்றி இருப்பதை கேட்கிறோம், பார்க்கிறோம், படிக்கிறோம். பாவத்தினின்று எப்போது இரட்சிக்கப்படுவது சிலர் எல்லாம் முடிந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்றிருப்பார். அப்படி இருக்கலாகாது. இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம் இப் பொழுதே இரட்சன்ய நாள் II கொரிந்தியர் 6 : 1 தீயினும் கொடிய பாவத்தினின்று இரட்சிக்கப்பட இன்றே நல்ல தீர்மானம் செய்வீர்.

ஜி. டேனியல்
சென்னை - 10.

## தேவனுடைய அழைப்பு சுவிஷேத்தினால் மாத்திரமே

*நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.*

**II தெச 2 : 14**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20 ஜூலை– 1996
ஜூலை THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701